

# பிரம்மம்

## 2017

புனித அந்தோனியார் கல்லூரி

இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரவணற் புதமலர் தலைக்கணிவோமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மம்



## புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி

### நவராத்திரி விழா

சிறப்பு மலர் 2017

இடம் : கல்லூரி மேல் மண்டபம்

நேரம் : காலை 9.30 மணிக்கு

திகதி : 29.09.2017 (வெள்ளிக்கிழமை)

## வெளியீடு

இந்து மாணவர் மன்றம்,
புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Rev. Fr. Principal

It gives me great pleasure to forward this message to the Souvenir 'Brammam' being published in view of the 'Annual Navarathri Vizha ' organized by the Hindu students association of our college .

In this highly competitive world where all the spiritual, ethical and moral values are disregarded and go by the rule of the jungle, we can be proud as Antonians join hands with Hindu brothers to celebrate Navarathri Vizha with the true sense of understanding of the religious values of each religion and with a deep sense of belongingness.

This new experience simply paves the way towards a variety education as it promotes thinking and enhances creativity of our students. Thus the students are made aware of their potentialities, getting advanced to enter into the world of challenges with much confidence and understanding.

I congratulate and thank the staff members, students, old boys, well wishers and parents for their untiring efforts to make this day graceful and memorable. God's choicest blessing on all.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் இந்த மன்றத்தினால் நடத்தப்படும் நவராத்திரி விழாவினை முன்னிட்டு வெளியிடும் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியினை அளிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

பூமித்தாய் முப்பெரும் தேவிகளாய் முழு அவனியையும் ஆட்சி செலுத்தி அலங்கரிக்கும் நிகரில்லா சக்தியினை நினைவு கூறும் பொருட்டு நவராத்திரியை அனுட்டிக்கின்றோம். இதன் மூலம் ஒவ்வொரு மானிடப் பிறவிக்கும் மிக அவசியமான கல்வி, செல்வம், வீரம் என்பவற்றின் அருள் கிடைக்கின்றது.

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்பதற்கிணங்க, மாணவர்களே எமக்குள் அசுரத்தன்மை காணப்படுவதால் அதன் வெளிப்பாடாக கோபம், பொறாமை, திருப்தியின்மை, அமைதியின்மை, அழிவுகள் போன்றன ஏற்படுகின்றன. இறை வழிபாட்டின் மூலம் இவ் அசுரத்தன்மையை கழுவி புனிதத் தன்மை பெற இவ்விழாக்கள் உதவுகின்றன. கல்வியின் மூலம் அறிவையும் அறிவின் மூலம் ஒழுக்கத்தையும் பயின்று இவ்வுலகில் அறவழியில் அன்பு வழி வாழ்நது பெருமை பெற அம்பிகையைத் துதிப்போமாக

இவ்விழாவினை இறைபக்தியுடன் நடாத்தும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்

பொ. பிரகாஷ்
பிரதி அதிபர்
(நிர்வாகத் துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

ஆயகலைகளின் அதிபதியாய் நின்று அருள் புரியும் கலைவாணிக்கு விழா எடுக்கும் இத்தருணத்தில் சைவசமய மாணவர்களின் ஆக்கங்களை ஏந்தி வெளிவிடப்படும் "பிரம்மம்" சஞ்சிகை சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்பது வள்ளுவன் வாக்கு அதற்கிணங்க கற்ற கல்வியை ஏடுகள் தாங்கி இயற்றமிழாய் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வெளிப்படுத்த களமாய் அமையும் பிரம்மம் என்றும் சமய ஒளி பரப்பி, இந்துமத கொள்கைகள் பண்பாடுகள் விழுமிய எண்ணங்கள் என்பவற்றை உலகமெலாம் எடுத்துச் செல்ல வாழ்த்துகிறேன்.

சமய பாரம்பரியங்களுக்கும் விழுமியங்களுக்கும் சவால் நிறைந்த இக்காலத்தில் எமது மாணவர்களை நன்நெறிப்படுத்தி பாரம்பரியத்தை காக்கும் வகையில் இந்து மாணவர் மன்றம் தம் பணிகளில் வெற்றிகண்டு சிறப்புற வாழ்த்துவதோடு மன்றத்தின் பணிகளில் அயராது உழைக்கும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் முயற்சி திருவினையாக அன்னை ஆதிபராசக்தியை பிரார்த்திக்கிறேன்.

திருமதி ஜெ. சேதுபதி
பிரதி அதிபர்
(இணைப்பாடச் செயற்பாடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாசிரியரின் எண்ணத்திலிருந்து ...

கண்டி மாநகரின் எழிலுக்கு எழில் சேர்க்கும் மகாவலி நதிக்கரையருகே கட்டுகஸ்தோட்டை எனும் இடம் தனியே தனிப் பெரும் புகழோடு நிலைத்திருக்கும் புனித அந்தோனியார் கல்லூரியின் இந்து மாணாக்கர்களினால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் நவராத்திரி விழா இவ்வாண்டும், இனிதே இடம்பெற முப்பெருந்தேவியரின் திருவருள் வாய்க்கப் பெற்றமை நாம் செய்த பாக்கியமே. அத்தோடு இவ்விழாவையொட்டி வெளிவிடப்படும் “பிரம்மம்” சஞ்சிகை இம்முறையும் இவ்விழாவில் மலர்வதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

சிறுவர்களின் சிந்தனைச் சிதறல்களையும் சேகரித்த தகவல்களையும் தன்னுள்ளே கொண்டதாக வெளிவரும் இச்சிறுநூல் இனிவரும் காலங்களிலும் மென்மேலும் வளம் பெற்று வளர எல்லாம் வல்ல இறைவனது ஆசிகள் பூரணமாக கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்து மாணவர்களது சமயம் சார் அறிவினை வளர்க்கவும் வளம்படுத்தவும் ஏற்றதான ஒரு களத்தை இச் சஞ்சிகையினூடாக இந்து மாணவர்கள் பூரணமாக பெற்று வளமடைய ஆசி கூறுகின்றேன்.

பா. சந்திரலேகா
பொறுப்பாசிரியர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீழ்ப்பிரிவு பொறுப்பாசிரியரின் சிந்தனையிலிருந்து ...

**மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்**
**ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே**
**ஏதா யினும்வழி நீ சொல்வாய்; எமதுயிரே**
**வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே.**

அம்மா என்ற சொல்லின் பொருளாக நிற்பவள் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முத்தேவியர்களாக விளங்குகின்ற அம்பாளே சிவன் தந்தை என்றால் உமை அன்னை, எமது தாய் சிவன் நெருப்பு என்றால் அம்பாள் நீர் ஆயிரம் கண்ணுடைய அம்பாளை தொழுபவர்கள் கல்வி, செல்வம், வீரம், ஞானம் முக்தி போன்ற பெரும் பாக்கியங்கள் பெற்று மகிழ்வார்கள்.

சிவபக்தன் இராவணேசுவரனால் ஆறு கோடி சிவலிங்கங்கள் ஸ்தாபித்து அரசாண்ட பெருமையும், அவன் தம்பி விபீடணனின் வேண்டுகோளின்படி ஜெகத்குரு வீரசைவ இரேணுகாச்சாரியாரால் ஒரே முகூர்த்தத்தில் மூன்று கோடி சிவலிங்கங்கள் பிரதிட்டை செய்து வணங்கப்பட்ட பெருமையும், சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்டதும், தேவார முதலிகளால் பாடல்பெற்ற திருத்தலங்களைக் கொண்டதுமான இலங்கைத்தீவின் மத்திய மலைநாட்டின் தலைநகரான எழில் கொஞ்சம் கண்டி மாநகரின் மகாவலி கங்கையின் சீதளக் காற்றை சுவாசித்த வண்ணம் தன்னிகரில்லா தனித்துவ கல்லூரியாய் புனித அந்தோனியர் கல்லூரி சமய மணம் பரப்பி தலை நிமிர்ந்து நிற்கின்றது. இந்துக்களின் வரலாற்றுச் சான்றுகளையும் மாணவர் விழுமியங்களையும் மாணவர்களிடையே அருகிவரும் சமய கலாசார விழுமியப் பண்புகளை மேலும் மேன்மையடையச் செய்து மெருகூட்ட இத்தருணத்தில், எமது கல்லூரியின் இந்து சமய மன்றத்தினால் நடாத்தப்படும் நவராத்திரி விழாவினை முன்னிட்டு வெளியிடும் **'பிரம்மம்'** சஞ்சிகைக்கு ஆசி செய்தியினை அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விழாவும் இதனோடு வெளிவரும் இவ்விதழும் இனிவரும் காலங்களிலும் மென்மேலும் சிறப்புற இறை ஆசியோடு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களது ஒத்துழைப்பும், ஆசிர்வாதமும் என்றென்றும் நல்க வேண்டுமென எல்லாம் வல்ல ஆதிபராசக்தி தாயை பிரார்த்திக்கின்றேன்.

பொறுப்பாசிரியர் (ஆரம்பப்பிரிவு)
திருமதி T. சசிகலா
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றத் தலைவரின் மனதிலிருந்து வரிகள் ...

புனித அந்தோனியார் கல்லூரியின் இந்து மாணவர்கள் இணைந்து வழங்கும் நவராத்திரி விழாவின் சிறப்பு அம்சமாக **"பிரம்மம்"** இதழ் வெளிவருகின்றது.

இவ்விழாவின் விழாத் தலைவனாக என்னுரை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இவ்விழாவிலே தனிமகுடமாய் அமையும் இம்மலரை வெளியிட ஊக்கமளித்து வழிநடாத்திய எமது இந்துமன்ற பொறுப்பாசிரியர் திருமதி. பா. சந்திரலேகா அவர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

அத்துடன் விழா மடலை வெளியிட அனுமதியளித்து ஆசி நல்கிய அதிபர் வண.பிதா ஹென்றி பெர்னாட் விஜேரட்ண அவர்களையும், விழா சிறப்புற எம்மை வழிநடத்தி ஊக்கம் தந்த இந்து மன்ற ஆசிரியர்களையும் மிக்க நன்றியுடன் நினைவு கூறுவதில் மகிழ்வுறுகிறேன்.

இன்றைய விழா வெற்றிகரமாக நிகழ அயராது பாடுபட்ட இந்து மாணவர் மன்ற உறுப்பினர்களையும் இதழ் வெற்றிகரமாக வெளிவர வழிவகுத்த இதழாசிரியர்களையும் மனமாற வாழ்த்துகின்றேன்.

இவ்விழாவின் மகுடமாகும் இந்நூல் காலம் கடந்தும் பேசப்படும் ஆவணமாக இருக்கவும் இந்நூல் தொடர்ந்து மலரவும், இவ்விழா சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

"எல்லாம் சிவமயம்"

G. தர்ஷன்
மன்றத் தலைவர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ற செயலாளரின் மனதிலிருந்து ...

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

அதாவது "கடவுளின் உண்மையான புகழை விரும்பிச் சொல்லி நாளும் வழிபட்டு வருவார்க்கு அறியாமையால் விளையும் நல்வினை தீவினை என்ற இரண்டும் வந்து அடையா" எனப் பொருள்படும்.

அத்தகைய இறைசக்தியே ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சக்தியாக உலகமெங்கும் வியாபித்துள்ளது. அத்தகைய சக்திக்கு விழா எடுத்து வழிபடுவது எம் இந்துமதமாகும் இவ்வாறான இந்து மதத்தினை கற்றறிந்தவன் பூரண ஒளி பொருந்தியவனாகின்றான். அவ்வகையில் சக்திக்கு சக்தி சேர்க்கும் வண்ணம் இக்கல்லூரி நவராத்திரி விழாவினை முன்னிட்டு "பிரம்மம்" சஞ்சிகை இம்முறையும் வெளிவருவதில் இக் கல்லூரியும் எமது இந்து மாணவர் மன்றமும் பெருமதிமடைகிறது. அதேபோன்று இவ் இந்து தர்மத்தின் ஒரு துளியை இச் சஞ்சிகையூடாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எம் மன்றமானது பாடசாலை மட்டத்தில் நவராத்திரி விழாவுடன் கலைதிறன் போட்டியையும் நாடாத்தி மகிழ்விக்கிறது எதிர்காலத்திலும் இன்னும் பல நற்பணிகளை இயற்றிச் சைவமும் தமிழும் தலைத்தோங்க தோள் கொடுக்கும் நம்பிக்கை.

இறுதியாக இவ்விழா சிறப்பாக நடைபெற உதவியாக அமைந்தோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்

"சர்வமும் சிவமே"

ஸ்ரீகிருஷான் K
செயலாளர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து ...

முத்தேவியரதும் முச்செல்வங்கள் முன்னின்று முதிர்வை நோக்க
நன்னாளாம் நவராத்திரி விழா நலன்கள் பல நல்கி ஏக
ஆண்டு 13 மாணவர் யாம் ஒற்றுமையில் ஒன்றாகி ஞாலம் காக்க
கண்டிடுவோம் நாம் நல்லுலகம் எம் கல்லூரித் தாய் மடியினிலே.

ஒளியின் மக்களாய் வருவாகிடும் இவ்வேளையில் எம் கல்லூரித் தாயின் மடியினில் யாம் காணும் இன்பத்திற்கும், உணர்வின் முதிர்விற்கும் ஏது எல்லை என நினைக்கையில் நன்றியுணர்வு பெருகுகின்றது. இறைவனவன் கிருபாகடாட்சத்தினால்.

யாம் வீறு நடைபோடும் விபரமான இப்பொழுதுகளில் எம் தம்பிமாரதும் எம்மவரதும் சுய சிந்தனைகள் சுய ஆக்கங்கள் இந்து மாணவர் மன்றம் தன் பிரமிப்பிற்கு எணையாத் தீபமாக விளங்குவதுடன் சொரியும் தேனமுதம் "பிரம்மம்" தங்களது கரங்களில் தவளவிருப்பது வந்தனைக்குரியது எனின் அது மிகையாகாது.

மாணவ நெஞ்சங்களின் தளராத அர்ப்பணிப்பு சோர்வை எண்ணாதது என நினைக்கையில் என் நெஞ்சம் அமைதி அடைகின்றது. வரும் காலங்கள் வளமானவையாக அவைதுடன், எம் தம்பிமாரது முயற்சிகள் யாவும் நற்சிந்தனையுடன் கூடிய உற்சாகமுடையவையாக அமையட்டும்.

அன்பாக அதிபர் அவர்களே, பாசம் மிகு ஆசான்களே, தேடற்கரிய நண்பர்களே உங்கள் அனைவரதும் ஊக்கத்திற்கும் உவகைக்கும் தலைவணங்கி நன்றியுணர்வில் தலை நிமிர்கின்றேன். நன்றி.

R. அபிலாஷ்
இதழாசிரியர்
இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ***Message from the president of the***

## ***Catholic Students' Federation***

I pen this few words to extend our heartiest pleasure to "Hindu students union" for organizing a "Navarathri Vizha" to evoke the blessings to our Alma mater and also for their commitment to fulfill the inter religious harmony in our school. I pray for the God Blessings on this "Navarathri Vizha" to make it a success.

Thank you and may God Bless you all.

Master Akesh Perera

President

Catholic students' federation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ***Message from the president of the Buddhist Brotherhood***

As the Buddhist association of St. Anthony's college, we would to convey our heart full wishes for the "Navarathri Vizha" celebrations which is organized by the Hindu students union of our school.

Moral and cultural development of the community can be expected through organizing such functions. So this effort of organizing "Navarathri Vizha" celebrations should be appreciated in a special way. As Buddhist we hope this "Navarathri Vizha" festival will be an occasion which unity between us as we Antonions specially may shimmer all around the world.

Master Oshada Abeyrathne
President
Buddhist Brotherhood

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ***Message from the president of the Islamic Students Majilis***

It is with great pleasure I write this message on behalf of the Islamic students' Majilis of our alma mater for the magazine, "Brammam" which is to be released by the Hindu students union on the occasion of their annual "Navarathri Vizha" 2017.

I take immense pride in the fact that our school is a great example for harmonious co-operation among students of multi-cultural and multi religious back grounds.

I would like to make use of this opportunity to congratulate the Hindu students union members on their achievements and wish them all the very best for their achievements and their future endeavors.

Alhamdulillah
Master Arshad Uzman
President
Islamic student Majilis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிஷேக பலன்

* தைலாபிஷேகம் (எண்ணை)- சுகம் கொடுக்கும்
* மாப்பொடி - கடனைப் போக்கும்
* நெல்லி முள்ளிப்பொடி - வியாதியைப் போக்கும்
* மஞ்சல் பொடி - வசீகரணம் உண்டாகும்
* ஜலதிரவியம் - சௌபாக்கியம் தரும்
* பஞ்சகவ்வியம் - தூய்மை உண்டாக்கும்
* பஞ்சாமிருதம் - புஷ்டி அளிக்கும்
* நெய் - வெற்றியைத் தரும், மோட்சம் கிடைக்கும்
* பால் - ஆயுள் பெருக்கும்
* தயிர் - மக்கட் பேறு அளிக்கும்
* தேன் - சுகமளிக்கும்
* கரும்புச்சாறு - பிணி நீங்கும்
* சர்க்கரை - பகையை அழிக்கும்
* வாழைப்பழம் - பயிரை வளர்க்கும்
* மாம்பழம் - சந்தானத்தை அளிக்கும்
* மாதுளை - கோபத்தை நீக்கும்
* நாரத்தை - நேர்மை அளிக்கும்
* எலுமிச்சை - பயமயத்தை அழிக்கும்
* அன்னம் - சாம்ராஜ்யம் தரும்
* இளநீர் - போகம் அளிக்கும்
* அன்னாபிஷேகம் - சாம்ராஜ்ய மளிக்கும்
* சந்தனம் - செல்வத்தை அளிக்கும்
* கும்பம் - மோட்சம்
* பத்ரோதகம் - பயத்தை நீக்கும்
* சங்குஜலம் - வெற்றி
* சஹஸ்ரதாரை - செழிப்பு

S. சப்ஜன்
7T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயக ரூபங்களும் பலன்களும்

* ஏகாக்ஷர கணபதி - கணபதி அருள் கிடைக்க
* மகாகணபதி - பரிபூரண சித்தி
* த்ரைலோக்கிய மோஹனகரகணபதி - உலகத்தை காப்பாற்ற
* ருணகரகணபதி - கடன் நீங்க
* மகா வித்தியாகணபதி - தேவி அனுக்கிரகம் பெற
* ஹரித்ரா கணபதி - உலக வசியம் பெற
* வக்ரதுண்டகணபதி - அதிஷ்ட லாபம்
* நிதி கணபதி - நிதிவளம் கிடைக்க
* பாலகணபதி - சந்தோஷம்
* சக்திகணபதி - சர்வ காரியமும் வெற்றி பெற
* க்ஷிப்ர ப்ரஸாதகணபதி - துரித பலன் பெற
* ஹேரம்பகணபதி - மனச்சாந்தி
* உச்சிஷ்ட கணபதி - திரிகால தரிசனம்
* வீரகணபதி - தைரியம் பெற
* ஸங்கடஹரகணபதி - துன்பம் நீங்க
* துர்க்காகணபதி - துக்க நிவாரணம்
* யோககணபதி - பயம் போக
* நிருத்தக்கணபதி ~ கலை வளர்ச்சி
* சித்திகணபதி - எல்லா காரியமும் வெற்றி பெற
* புத்திகணபதி - அறிவு வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

1. என்னிடம் 6 நாணயமான நண்பர்கள் இருக்கின்றனர், அவர்கள் தான் எனக்கு எல்லாம் கற்றுத் தருகின்றனர். அவர்களுடைய பெயர்கள், எங்கே? என்ன? எப்போது? ஏன்? எப்படி? யார்? என்பனவாகும்.

- ருட்யார்ட் கிப்ளிக் -

2. செயற்கரிய செயலை எளிதாக செய்து முடிப்பவனே நல்ல ஆசிரியன்

- ரால்ப் வால்டோ எமர்சன் -

3. கல்வியின் வேர்களோ கசப்பு ஆனால் கனியோ இனிப்பு

- அரிஸ்டோட்டில் -

4. கற்றுக் கொடுக்க நினைப்பவன் ஒருபோதும் கற்பதை நிறுத்தக்கூடாது

5. ஒரு பள்ளிக்கூடத்தைத் திறப்பவன், ஒரு சிறைச்சாலையை மூடுகிறான்

- விக்டர் ஹியூகோ-

P. யதுர்ஷன்
$10^{D}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனை துளிகள்

* இறப்பு என்பது ஒருவருக்கு உறக்கம் போன்றது. பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வது போன்றது.

* மறக்கவேண்டியவைகளை மறக்காமல் நினைத்திருப்பதும் மறக்க வேண்டாதவைகளை மறந்து விடுவதும் இந்த உலகத்தின் இன்றைய துன்பங்களுக்கு காரணம்.

* சோகத்தில் துவண்டு விடாதீர்கள், இன்பத்தில் மயங்கி விடாதீர்கள் ? இரண்டையும் சமமாக பகிர்ந்து கொள்ளுங்கள்.

* அஹிம்சை சிறந்த பண்பாகும்.

* பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.

* நாக்கு கொடிய மிருகம் ஒருமுறை அவிழ்த்து விட்டால் கட்டுவது கடினம்.

* ஒருவரைத் தண்டிப்பதாக இருந்தால் தனிமையில் தண்டியுங்கள், ஒருவரை பாராட்டுவதாக இருந்தால் பலரறியப் பாராட்டுங்கள்.

* சிறந்த தாய் 100 ஆசிரியர்களுக்குச் சமம்.

* அமைதியும், பொறுமையும் மனிதனின் ஆற்றலை அதிகரிக்க செய்கின்றன.

* விட்டுக் கொடுப்பதால் கெட்டுப் போகமாட்டோம்.

P. சதுர்ஷன்
9T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கையர்களுக்கு சில குறிப்புகள்

- ஒட்டுப் பொட்டுக்களைத் தவிர்க்க வேண்டும்.
- சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக் கூடாது.
- இரவில் வீட்டைக் கூட்டி குப்பையை வெளியே போடக்கூடாது.
- பெண்கள் பூசணிக்காய்களை வெட்டக்கூடாது. கர்ப்பிணி பெண்கள் தேங்காய் உடைக்கக்கூடாது.
- வாசலில் தலைவிரி கோலமாக உட்காரக்கூடாது.
- வீட்டுக்குவரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரிசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.
- அதிகாலையில் வீடுவாசலைக் கூட்டி நீர் தெளித்துக் கோலமிட வேண்டும்.
- கோலம் போடும் போது சுப காரியத்திற்கு இரண்டு கோடும், அசுப காரியத்திற்கு ஒரு கோடும் போடவேண்டும்.
- உரல், அம்மி, முறம், வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக் கூடாது.
- சுமங்கலி கணவனுடைய அனுமதி பெற்றே விரதமிருக்க வேண்டும்.

R. ரிஷிகர்
8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விரதம்

| நாள் | இராகம் | பிரசாதம் | பழம் | புஷ்பம் | பத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1வது | தோடி | வெண்பொங்கல் சுண்டல் | வாழை | மல்லிகை | வில்வம் |
| 2வது | கல்யாணி | புளியோதரை | மா | முல்லை | துளசி |
| 3வது | காம்போதி | சக்கரை பொங்கல் | பலா | சம்பங்கி | மரு |
| 4வது | பைரவி | கறிச்சாதம் பொரியல் | கொய்யா | ஜாதிமல்லிகை | கதிர்ப்பச்சை |
| 5வது | பந்துவராளி | தயிர்சாதம் | மாதுளை | பவளமல்லி | விபூதிப்பச்சை |
| 6வது | நீலாபரி | தேங்காய்ச்சாதம் | நாரத்தை | செம்பருத்தி | சந்தன இலை |
| 7வது | பிலகரி | எலுமிச்சம்பழம் | பேரீந்து | தாழம் பூ | தும்பை இலை |
| 8வது | புன்னகைவராளி | பாயசம், முறுக்கு | திராட்சை | ரோஜா | பன்னீர் இலை |
| 9வது | வசந்தா | திரட்டு பால் | நாவல் | தாமரை | மரிக்கொழுந்து |

R. ரஜீஹரன்
8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்று மகிமை

கருத இனியது, காண இனியது, பரவ இனியது, பூச இனியது, பேச இனியது, இருமைக்கும் உள்ளது, உண்மையில் உள்ளது. சமயத்தில் உள்ளது. வேதத்தில் உள்ளது, வானம் அளிப்பது, வானவர் அளிப்பது, முனிவர் அணிவது, வருத்தம் தவிர்ப்பது, தராவனம் ஆவது, பராவனம் ஆவது, தக்கோர் புகழ்வது, தேசம் புகழ்வது, துதிக்கப்படுவது, பயிலப்படுவது, இராவணன் மேலது, வானவர் மேலது, ஓதத் தகுவது, எண்ணத் தகுவது, ஏத்தும் தகையது, மானம் தகைவது, தராவணம் ஆவது, பராவணம் ஆவது, தயிலை தடுப்பது, அவலம் அறுப்பது, பாவம் அறுப்பது, ஆசைக் கெடுப்பது, எயிலது அட்டது, வெந்துயர் தீர்ப்பது.

R. அகிலாஷ்
8T

## நவராத்திரியில் நவகன்னிகை வழிபாடு

நவராத்திரி நாட்களில் தினமும் அம்மனை எவ்வாறு வழிபட வேண்டும் என்ற வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் நவ துர்க்கையாகவும் நினைத்து வழிபடுகின்றனர். 10வயது நிரம்பாத கன்னிகையாக தினமும் ஒரு பருவத்தில் அம்பிகையை வழிபடுவது நவகன்னிகை வழிபாடு என்று அழைக்கப்படுகிறது. முதல் நாளில் 2 வயது குழந்தை குமாரி, இரண்டாம் நாளில் 3 வயது குழந்தை திரிமூர்த்தி, நான்காம் நாள் 5 வயது குழந்தை ரோகிணி, ஐந்தாம் நாள் 6 வயது குழந்தை காளிகா, ஆறாம் நாள் 7 வயது குழந்தை சண்டிகா, ஏழாம் நாள் 8 வயது குழந்தை சாம்பவி, எட்டாம் நாள் 9 வயது குழந்தை துர்க்கா, ஒன்பதாம் நாள் 10 வயது குழந்தை சுப்ரதா என்று ஒவ்வொரு நாளும் ஒரு பெயரில் நவ கன்னிகை வழிபாட்டை செய்ய வேண்டும்.

## நவராத்திரி கொலு

நவராத்திரி கொலுவில் ஒன்பது படிகள் வைப்பது வழக்கம். கீழே உள்ள மூன்று படிகளில் வைக்கப்படும் அரிசி, பருப்பு, பாத்திரம் போன்றவை தாமச குணத்தை குறிக்கும். அடுத்த மூன்று படிகளில் வைக்கப்படும் அரசர், ராணி, மந்திரி போன்றவை ரஜோ குணத்தை காட்டும் மற்ற மூன்று படிகளில் வைக்கப்படும் தெய்வ உருவங்கள் தத்துவ குணத்தை அடையும் வழியை நமக்கு காட்டுகின்றது.

I. ஷரண்
10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருக வழிபாடு

- 'முருகு' என்ற சொல், இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும்.
- குமரக்கடவுளை வழிபடும் சமயம் கௌமாரம் எனப்படும்.

## முருகனின் ஆறுமுகங்களும் தொழில்களும்

- உலகிற்கு ஒளிதருவது
- வேள்வி காப்பது
- அடியார் குறை நீக்கி வரம் அருள்வது
- வேத ஆகமப் பொருளை விளக்குவது
- பகைவரை, தீயோரை அழித்து நன்மை செய்வது
- வள்ளிக்கு மகிழ்வைத் தருவது

## முருகனின் ஆறுபடை வீடுகளும் மகத்துவங்களும்

- திருப்பரங்குன்றம் - தேவந்திரன் மகள் தெய்வானையை மணந்த தலம்
- திருச்சீரலைவாய் - சூரனை வதைத்தது
- திருவாவிண்குடி - மாங்கனி கிடைக்காது பாலகப் பருவத்தில் துறவியாய் நின்றது.
- திருஏரகம் - தந்தைக்கு பிரணவப் பொருள் உணர்த்தியது
- குன்றுதோறாடல் - வள்ளியை மணந்தது
- பழமுதிர்ச்சோலை - தேவியர் இருவருடன் ஏகாந்தமாய் இருக்கும் தலம்

S.J. ஹர்ஷன்
10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்மை தவறா அதிகாரி

ஓர் ஊரில் அரசர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் சதானந்தம் அவர் ஒரு நேர்மையான அதிகாரி. அவர் அரச உடைமைகளையோ சொத்துக்களையோ தன் சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தவே மாட்டார். இவருடைய குடும்பத்தினரும் இவரை போலவே நற்குணம் உடையவர்கள்.

திடீரென அவரது அயலூரில் விடாது அடைமழை பெய்ததால் ஊரே வெள்ளத்தில் மூழ்கியது. மண்சரிவு ஏற்பட்டதால் மக்கள் வீழ்ந்தனர். பொருட்களை இழந்தனர். இவர்கள் துன்பப்படுவதைப் பார்த்த சதானந்தம் அவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவியைச் செய்ய நினைத்தார்.

உடனே வெளிநாட்டுத் தனியார் நிறுவனம் ஒன்றின் உதவியை நாடினார். அவர்கள் மக்களுக்கு வழங்குவதற்காக புதிய கம்பளிப் போர்வைகளையும் நுளம்புவலைகளையும் சில உணவுவகைகளையும் சதானந்தத்திடம் கொடுத்தனர். அப்பொருட்களை அரசவிடுதியில் வைக்கப்பட்டிருந்தன. இதனை அறிந்த திருடன் ஒருவன் அவற்றைத் திருட நினைத்தான். இரவு தன் நண்பர்களோடு அதிகாரியின் வீட்டிற்குள் நுழைந்தான். அங்கே சதானந்தமும் அவரது குடும்பத்தினரும் வெறும் தரையில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர் அதைக்கண்ட திருடன் வியப்படைந்தான். "பக்கத்தில் புதிய பல கம்பளிப் போர்வைகள் அடுக்கப்பட்டிருந்தும் அவற்றில் ஒன்றையேனும் எடுத்துப் பயன்படுத்தாமல் அப்படிக் குளிரில் படுத்து உறங்குகிறார்களே! நாளை இவற்றை மக்களுக்கும் கொடுக்கப் போகின்றார். இன்று ஒரு நாளேனும் இவற்றை பயன்படுத்தலாமே" என நினைத்தான்.

இந்த நினைவில் திருடவந்ததை மறந்தே போனான்! இக்கேள்வியை அதிகாரியிடமே கேட்கலாமே என எண்ணி, சமாதானத்தை எழுப்பிக் கேட்டான். அதற்கு அதிகாரி நிதானமாக, "இது கஷ்டப்படும் ஏழை மக்களுக்காக வழங்கப்பட்டது. பல ஏழைமக்கள் உறங்குவதற்கே இடமில்லாது குளிரில் கஷ்டப்படுகின்றனர். இந்த நிலையில் நான் ஒரு போர்வையை எடுத்தாலும் அது பெரிய பாவமல்லவா?" எனக் கூறினார்.

இதைக் கேட்ட திருடன் மனம் திருந்தினான். இதன் பின் தான் திருடுவதில்லை என முடிவெடுத்தான்.

P. Dilukshan
9T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில முக்கிய ஆசார முறைகள்

* கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்.
* தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறையும்.
* தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திரர் அழிவை ஏற்படுத்தும்.
* தனது இடது கையினால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும்.
* தனது இடது கையினால் படுக்கை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.
* ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்தில் கண்டிப்பாக உதவ வேண்டும்.
* பசு, தேர், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால்; வலது புறம் சுற்றி செல்ல வேண்டும்.
* குடும்பத்தின் தலைவன் ஒரு துணியுடன் உணவு உட்கொள்ள கூடாது.
* ஒரு கையைத் தரையில் ஊன்றிக் கொண்டு சாப்பிடக் கூடாது.
* துணியில்லாமல் குளிக்கக்கூடாது.
* சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக்கூடாது.
* நெருப்பை வாயால் ஊதக் கூடாது.
* நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் உண்ணக்கூடாது.
* ஈரக் காலுடன் படுக்கக்கூடாது.

ப. சித்தார்த்
8D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பே உயர்வு தரும்

"செய்யும் தொழிலே தெய்வம்
அந்த திறமைதான் நமது செல்வம்"

என்பது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாட்டு வரிகளாகும். நாம் எந்த தொழில் செய்கிறோம் என்பது முக்கியமல்ல அதை உழைப்பினால் செய்கிறோமா என்பதே முக்கியம் நாம் நம் கடின சுய உழைப்பினால் செய்யும் தொழிலில் நமது திறமைகளும் பளிச்சிடவேண்டும்.

உழைப்பின் மூலம் செய்யும் தொழில்கள் யாவுமே சிறப்புடையன இதனையே மகாகவி பாரதியார் "கைவருத்தி உழைப்பவர் தெய்வம்" என உழைப்பாளிகளை வியந்து பாராட்டுகின்றார். தொழிலாளர்களை பிரம தேவனாகவும் தெய்வமாகவும் உருவகித்து காட்டுவதன் மூலம் உழைப்பாளிகளின் சிறப்பினை உயர்த்தி காட்டுகின்றார், பாரதியார்.

தொழில் மகத்துவத்தையும் தொழிலாளர்களின் உழைப்பை போற்றாத சமூகம் ஒரு போதும் எழுச்சி பெற முடியாது என்பதையும் பாரதியார் உணர்த்துகின்றார்.

"கைகளைக் கொண்டு உழைப்பவன் பாட்டாளி கைகளோடு மூளையையும் பயன்படுத்தி உழைப்பவன் தொழின் வினைஞன் கைகள், மூளை இவற்றுடன் இதயத்தையும் செலுத்தி உழைப்பவன் தான் கலைஞன்" என்கிறார்கள் மேலைத்தேய அறிஞர்கள்.

உத்தரவால் வாழ்கிறான் பணக்காரன்: உழைப்பால் வாழ்கிறான் ஏழை எனும் கருத்தும் இதற்கு பொருந்தும். ஆகவே, நாமும் உழைப்பை நம்பி செய்யும் தொழிலே தெய்வம் எனவும் கொண்டு வாழ்வில் உயர்வடைவோம்.

G. பிரவீன்
(6T)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல் திருநாள்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகின்றது.

### தமிழர் திருநாள் ...

தைப்பொங்கல் அறுவடைத் திருநாள் என கூறப்படும் தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல; பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் திருநாள் விசேஷமாக கொண்டாப்படுகிறது. தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் வெகு விமர்சையாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை. இந்தியா, மலேசியா, கனடா, சிங்கபூர், இலங்கை மொரிசிலாஸ் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளிலும் கூட விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம். மலேசியா, இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசு விடுமுறையும் வழங்குகின்றார்கள்.

### தோற்றம்

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாக தெரியவில்லை. 1000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இப் பண்டிகை கொண்டாடப்படுகிறது என்று ஒரு கூற்று உள்ளது. சோழர்காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு புதியீடு என்று பெயர் இருந்தது. அதாவது ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள் உழவர்கள் தை மாதத்தில் முதல் நாளில் ஆண்டின் முதல் அறுவடை மேற்கொள்வது வழக்கமாயிருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள்.

### 3ம் நாள் விழா

பொங்கல் பண்டிகை மொத்தம் 3 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகிப் பண்டிகை, அடுத்த நாள் பொங்களிடும் நாள். 3ம் நாள் மாட்டுப்பொங்கல் நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றிற்கு நன்றி கூறும் நாளாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

**போகி**

பொங்கல் திருநாளில் முதல் நிகழ்வான போகி பண்டிகையன்று அதிகாலையில் அனைவரும் எழுந்து குளித்து வீட்டில் உள்ள தேவையற்ற பழைய பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொழுத்துவார்கள் தீயவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

**வீட்டுப்பொங்கல்**

இரண்டாவது நாளான பொங்கல் விசேடமானது இந்த தை மாதப் பிறப்பன்று புது பானையில் மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையை சுற்றி கட்டி, புதுபானையில் புத்தரிசி இட்டு, வெல்லமிட்டு பொங்களிடுவர் அரிசி நன்கு சமைத்து பொங்கி வரும்போது "பொங்கலோ பொங்கல்" என்ற குரலோடு பொங்கல் இறக்க வேண்டும்.

**மாட்டுப்பொங்கல்**

மாட்டுப் பொங்கலின் போது மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு நன்கு குளியாட்டி அலங்காரம் செய்து படையளிட்டு வழிபடுவர். ஆண்டெல்லாம் நமக்கு உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் முகமாக கொண்டாடப்படுகிறது மாட்டின் கழுத்தில் மணிகட்டி கொம்பு சீவிசுதந்திரமாக திரிய விடுவார்கள். இதுவே ஜல்லிக்கட்டாக மாறியது.

R. ராகேஷ் பிள்ளை
7T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி விபுலாநந்தர் (27.03.1892 - 19.07.1947)

சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு எனும் ஊரில் 1892.03.27 ஆம் திகதி பிறந்தார். இவரின் பெற்றோர் பெயர் சாமிதம்பி, கண்ணம்மா ஆகும்.

இவர் ஆரம்ப கல்வியை கல்முனை மெதடிஸ் ஆங்கில பாடசாலையிலும் மட்டகளப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் பெற்றார். கேம்பிரிட்ஜ் சீனியர் சோதனையில் சித்தியடைந்து பின்னர், அவர் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக சில காலம் பணி புரிந்தார். அதன் பின் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் சேர்ந்தார்.

ஆசிரியர் பயிற்சி காலாசாலையின் 1912 ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதலுடன் மீண்டும் மட்டகளப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

1915 ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பகல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916 இல் அறிவியலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரை தமிழ் சங்கம் நடத்திய தேர்வில் தோன்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையர் இப்பட்டத்தை முதன் முதல் பெற்ற சுவாமி விபுலாநந்தரே.

கொழும்பு அரசினர் தொழிநுட்ப கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். இவரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பை தேடி கொடுத்தன. அதனால் 1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்பத்துடன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய BSC தேர்வில் தோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்தார். மயில்வாகனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும், திருப்புகழ், சிவப்பிரகாசம் சிவஞானசித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிழங்கத்தாரின் வேண்டு கொளுக்கிணங்கி மானிப்பாய் இந்து கல்லூரியிலும் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் அரங்கேற்றத்துக்கு பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் 1947 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 19 ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலாநந்தர் இறைவனடி சேர்ந்தார்.

N.K. சஜீவன்
9T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய ஒழுக்காறுகள்

சைவர்களாகிய நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்காறுகள் பல உள்ளன. அவையானவை திருநீறு அணிதல், திருவைந்தெழுத்தை ஓதுதல், தியானம் செய்தல் ஆலய வழிபாடு செய்தல், சைவசமய முறைப்படி நடத்தல் சிவசின்னங்களை மதித்தல் மற்றும் சைவ சமயத்திற்கு கட்டுப்படல் என்பன சிலவாகும்.

நம்மை சைவர்கள் என வெளிக்காட்டவும் சைவ சமயத்தை ஓங்க வைப்பதற்காகவும் நாம் சிவசின்னங்களுள் பிரதானமான ஒன்றான திருநீற்றை அணிதல் வேண்டும். சமய ஒழுக்காறுகளுள் இன்றியமையாதது திருநீறு அணிதல் ஆகும். இதனை அணியும் போது சிவனை மனதில் நிறுத்திக் கொண்டும் திருவைந்தெழுத்தை மனநிறைவுடன் உச்சரித்துக் கொண்டும் அணிய வேண்டும்.

திருவைந்தெழுத்து என்பது 'நமசிவாய' என்பதே ஆகும். இது சிவனை பற்றிய நாமம் என்பதால் திருவைந்தெழுத்து ஓதுதலும் சமய ஒழுக்காறுகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. இதனை ஆறுதலாகவும், அமைதியாகவும், அன்போடும் ஒவ்வொரு நாளும் ஓதுதல் வேண்டும். அத்தோடு தேவாரத்தையும் ஓதுதல் வேண்டும். தேவாரம் என்பது இசையினால் இறைவனுக்கு சூட்டப்படும் பாமாலை ஆகும்.

இதை தவிர பஞ்சபுராணம் சைவர்களால் பாடப்படுவதாகும். சைவர்கள் இறைவனை தரிசிக்க பஞ்சபுராணம் பாடுவர். பஞ்சபுராணம் என்பது தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் எனும் ஐந்தையும் கொண்ட ஒரு தொகுதியே. இதனை பண்ணோடு பாடுதல் வேண்டும். இதனை பாடும் முன்பும் பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுதல் அவசியமாகும்.

சமய ஒழுக்காறுகளுள் மிகவும் மேன்மையானது தியானம் செய்தல் ஆகும். தியானம் என்பது ஆத்மா பிரபஞ்ச பேராற்றலுடன் தன்னை இணைத்துக் கொள்வதே ஆகும். நாம் இறைவனை நினைத்து மன சஞ்சலத்தை தவிர்த்து இருக்கும் போது எம் மனம் ஒரு நிலையடைந்து அமைதியாகி விடும். இதனால் இது எம் ஆசையையும், மோகத்தையும் கட்டுப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எப்போதும் சிவனடியார்களை வணங்குதல் வேண்டும். அவர்களை ஏளனம் செய்யக்கூடாது. இவ்வாறே அவர்களுடன் இணைந்து திருநாட்களை கொண்டாடுதல் வேண்டும். இந்நாட்களில் அவர்களது திருச்சரித்திரங்களை கூறி அல்லது கேட்டு வழிபடல் வேண்டும்.

சைவர்களாகிய நாம் நாள்தோறும் கோயிலுக்கு செல்லுதல் வேண்டும் ஏனெனில் ஆலய வழிபாடு மேன்மை தரும். கோயிலுக்கு தினமும் செல்ல இயலாதோர் வெள்ளிக்கிழமைகளிலாவது செல்ல வேண்டும். மேலும் பிரதோஷம், நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சஷ்டி, பௌர்ணமி, அமாவாசை, விநாயகர் சதுர்த்தி இதை தவிர்த்து ஆடிப்பூரம், தீபாவளி, தைத்திருநாள், சித்திரை வருடப்பிறப்பு போன்ற பண்டிகை காலங்களிலும் இறை வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

ஆலயம் தூய்மை நிறைந்த இடம் என்பதால் அங்கு செல்பவர்கள் உடலையும் மனத்தையும் தூய்மையாய் வைத்துக் கொள்ள வேண்டும். ஆலயத்திற்கு செல்வோர் நீராடி , தூய ஆடை அணிந்து சிவசின்னங்களை தரித்து, திருவைந்தெழுத்தை உச்சரித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

எனவே, சைவர்களாகிய நாம் சைவ சமய பழக்கவழக்கங்களை அதாவது சமய ஒழுக்காறுகளை கடைபிடித்து அதற்கு கட்டுப்பட்டு அதனை ஏற்று செயற்பட வேண்டும்.

R. கிதுர்ஷன்
$7^D$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்க முறைகள்

